2005 செப்டம்பர் 22]

அறவே நொறுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மீனவ மக்களுக்கு அடுத்த மாதத்திலேயே இந்தப் படகுகளைக் கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் துவங்க முடியும் என்று அரசால் கருதப்படுகிறதா? அதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தகவலைக் கூறி இருக்கின்றார்கள். அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரைக்கும் உங்கள் எல்லோருக்குமே தெரியும். கடந்த 26–12–2004 அன்று சுனாமி பேரழிவு ஏற்பட்டபோது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சில தலைவர்களெல்லாம் சுனாமி நடந்ததற்குப் பிறகும் போகாத நேரத்தில், 3 தடவைகளுக்கு மேலாக சென்று அந்த பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்திருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சியாக மீனவப் பெருமக்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் தொடர்ந்து செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

18—

குடிநீர் விநியோகம்

***23635—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பேரூராட்சிக்கு ஈலாடா நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி சிறப்பு

சிற்றூராட்சிக்கு ஈலாடா நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நீர்த்தேக்கத்திலிருந்து நீராதாரமாகக் கொண்ட குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி, தாலுகா தலைநகரமாக இருக்கிறது. இங்கு வசிக்கும் மக்களுக்கு வாரத்திற்கு ஒரு முறைதான் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஈலாடா நீர்த்தேக்கத்தில் போதுமான தண்ணீர் இருக்கிறது. எனவே, இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வழங்குகின்ற வகையில் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி சிறப்பு சிற்றூராட்சியிலே 53 குடியிருப்புகளில் முன்பு நிறைவேற்றப்பட்ட ஈலாடா நீர்த்தேக்கத் திட்டத்தின்மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதில் 18 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 5 குடியிருப்புகளில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 57 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மீதமுள்ள 5 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கு ஒரு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 118.97 இலட்சம் ரூபாயில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, நாள் ஒன்றுக்கு மொத்தம் 8 இலட்சத்து 70 ஆயிரம் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். இதன்மூலம் மீதம் இருக்கின்ற பகுதி மக்களுக்கும் 70 லிட்டர் குடிநீர் வழங்குவதற்குண்டான வழிகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டம் அபிவிருத்திச் செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இத்திட்டத்தை 3 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்புப் பொறியாளர் உடனடியாக செய்து கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். 3 ஆண்டுகள் ஆகியும் இந்தத் திட்டம் இன்னும் துவக்கப்படவில்லை. எனவே, அரசு விரைந்து செயல்பட்டு இத்திட்டத்தை நிறைவேற்றி, கோத்தகிரி மக்களுக்குத்

2005 செப்டம்பர் 22]

தினமும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 11–30

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதிலே மிகவும் ஆர்வம் கொண்டு வழங்கிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு, அரசு முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

19—

மின்சார சுடுகாடு

***37517—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் மின்சார சுடுகாடு அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகராட்சியில் மின்சார சுடுகாடு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில் நெல்லை மாநகராட்சியினுடைய ஜனத்தொகை கிட்டத்தட்ட 4–1/4 இலட்சம் இருக்கின்றது. அங்கே சுடுகாடு என்ற பெயரால், தாமிரபரணி ஆற்றங்கரை ஓரமாக பல சுடுகாடுகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே எரிக்கப்படுகின்ற காரணத்தால் சுற்றுப்புறச் சூழ்நிலை